மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 10ஆவது ஏற்பாட்டின்படி திரு.ஆர்.சக்திவேல், உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண். 209/2014 | | என்பவரின் வாக்குமூலம் | |
| பெயர் | .. பட்டு அம்மாள் | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

27.02.2019 - வா.சா.1 முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். 30.6.1992 தேதியிட்ட தாவா அ அட்டவணை என்னுடைய கணவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள தாவா சொத்திற்கான நத்தம் நிலவரி திட்டத்திற்கான தூய சிட்டா வா.சா.ஆ.1. தாவா சொத்துக்களுக்கு என் கணவர் பெயரில் பட்டா எண்.243க்கு வழங்கப்பட்டுள்ள மனைவரி தோராய பட்டா வா.சா.ஆ.2. 10.12.2008 தேதியில் என் கணவர் பெயரில் செலுத்தப்பட்டுள்ள வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.3. 5.7.2012 தேதியில் என் கணவர் பெயரில் செலுத்தப்பட்டுள்ள வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.4. 8.12.2012 தேதியில் என் கணவர் பெயரில் செலுத்தப்பட்டுள்ள வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.5. 17.10.2012 தேதியில் என் கணவர் என் பெயரில் தாவா சொத்துக்களை பொறுத்து எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.6. மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையான

ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஓம்./-வே.ஜெகன்னாதன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போளூர்.